R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
April 2020







Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**
Every Tuesday 6.00 P.M on Tamilan TV &
Every Saturday 8.00 P.M on Nambikkai TV
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 ஏப்ரல் 2020 கனி 5




THE WORD OF CHRIST

**You're never alone when you're reading The Bible**



ஆசிரியர்
B. அர்ஜுனன்





# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

**பாடம்** : 5
**தலைப்பு** : ஜீவதண்ணீர் - Living Water
**வேத வாசிப்பு** : ஏசா.55:1-7

| | |
|---|---|
| 1. ஜீவதண்ணீர் ஊற்றாகிய | - எரே.2:13 |
| (எ.கா) கன்மலையிலிருந்து | - எண்.20:8-11 |
| 2. ஓ, தாகமாயிருக்கிறவர்களே | - ஏசா.55:1 |
| (எ.கா) அவர் எனக்கு ஜீவதண்ணீர் | - யோவா.4:10 |
| 3. என்னிடத்தில் விசுவாசமாயிருக் | - யோவா.7:38 |
| (எ.கா) உலகம் அந்தச் சத்திய | - யோவா.14:17 |
| 4. ஆட்டுக்குட்டியானவரே இவர்களை | - வெளி.7:17 |
| (எ.கா) நான் ஜீவதண்ணீருற்றில் | - வெளி.21:6 |


YouTube




the word of christ
இருபத்து நான்கு மணிநேரமும்
உலகமெங்கும்
YouTube
வழியாக
பார்த்து சத்தியத்தை
அறிந்துகொள்ளுங்கள்
தொடர்புக்கு
9443558041
6379350509



**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 236

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவனுடைய மாயமற்ற விசுவாசத்தை பவுல் நினைவு கூர்ந்தார்?
2. உங்களில் ஒருவனும் தன் சகோதரனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும் இருங்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார்?
3. உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு, நாடோறும் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டுவதென்ன?
4. கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்பினவர்கள் எவர்கள்?
5. நாவானது சிறிய அவயவமாயிருந்தும் எப்படிப்பட்டவைகளைப் பேசும்?
6. பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்ட பானபாத்திரம் யாருடையது?
7. புருஷர்கள் மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால்... அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யவேண்டுமா?
8. இஸ்ரவேலர் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக்கி அரைத்து தண்ணீரின்மேல் தூவி அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தவன் யார்?
9. யார் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது?
10. லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகளையோ லேவியர் எக்காலத்திலும் மீட்டுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்ததா?

## வேதாகம ஆய்வு... 21


ஆபிராம் - Abram

1. தேராகுவின் மகன்.
2. கல்தேய பட்டணமாகிய 'ஊர்' என்ற இடத்தில் பிறந்தவன் – ஆதி.11:31
3. இவன் மனைவிக்கு சாராய் என்று பெயர் – ஆதி.11:29
4. தேவனுடைய சிநேகிதன் என்று பெயர் பெற்றான்.
5. ஆபிரகாம் 100 வயதில் ஈசாக்கைப் பெற்றான்.
6. ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணைப்பட்டது – ரோமர் 4:3
7. இன்றும் விசுவாசிகளின் தகப்பனாக இருக்கிறான்.

சிறுவர் பகுதி

## ஆண்டவருக்கு வேண்டும்

*வேத பகுதி:மாற்கு 11:1_10*



ஆண்டவர் மனிதனிடத்தில் கேட்ட ஒரு சிலவற்றில் இந்த கழுதைக் குட்டியும் ஒன்று. ஆண்டவர் கேட்டா இல்லை என்று சொல்வார்களா என்ன?

ஒரு முறை இயேசு ஒலிவமலைக்கு அருகான பெத்பகே பெத்தானியா என்ற ஊருக்கு வந்து தம்முடைய சீஷர்களில் இரண்டுபேரை அழைத்து: உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள் அங்கே ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்க காண்பீர்கள் அதை அவிழ்த்துக் கொண்டுவாருங்கள். ஏன் அதை அவிழ்க்கிறீர்கள் என்று கேட்டால் அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள் உடனே அதை இங்கு அனுப்பி விடுவான் என்று சொல்லி அவர்களை அனுப்பினார்.

அவர்கள் புறப்பட்டு போய் அந்தப்படியே சென்று அந்த கழுதைக் குட்டியை அவிழ்த்தார்கள். இயேசு தங்களிடத்தில் சொன்னபடியே அந்த உரிமையாளனிடம் சொன்னார்கள் அப்பொழுது அவன் அதை அனுப்பிவிட்டான். நீங்களா இருந்தா கொடுப்பீங்களா? ஓ கொடுப்போமே என்கிறீர்களா?. மிக நல்ல பிள்ளைகள். நாம் ஆண்டவருக்குக் கொடுக்கும்போது கர்த்தர் நம்மை நிச்சயம் ஆசீர்வதிப்பார். அந்த கழுதைக் குட்டியின் மீது தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள் இயேசு அதன்மீது ஏறினார். பின்பு அவர்கள் கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப் படுவதாக உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். நம்மெல்லோருக்கும் இயேசு ராஜாவாக இருப்பதினாலே இவ்விதமாகச் சொன்னார்கள். அவர் ராஜாவானால் அவருடைய ராஜ்யம் நமக்குள்ளே இருக்கிறதல்லவா! ஆம் அந்த ராஜ்யம் அவருடைய சபையே.

**மனப்பாட வசனம்**

“அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அவரைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்” (மாற்கு12:17).

**நடப்புச்செய்திகள்**

- ❒ வாட்ஸ்ஆப் மூலம் சமையல் எரியாயுசிலிண்டர் முன்பதிவு செய்யும் வசதியை இந்திய ஆயில் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❒ ஜப்பான் கடலுக்குள் ஒரு செயற்கையான தீவை உருவாக்கி, அதன் மேல் விமான நிலையத்தை அமைத்திருக்கிறது.

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 20 ஏப்ரல் -2020 கனி - 5

ஆசிரியருரை

## கர்த்தர் வீட்டைக் கட்டுகிறார்
## The Lord Builds the House



"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா" என சங்கீதத்தில் வாசிக்கிறோம் (சங்.127:1). ஆம், கர்த்தர் வீட்டைக் கட்டுகிறார். அநேக வீடுகள் பிரிந்து இருக்கிறது. காரணம் என்ன? தேவனுடைய சித்தத்தின்படி அவர்கள் இணைக்கப்படவில்லை. தேவனுடைய சித்தத்தை புரிந்து அவர்கள் தேவனால் இணைக்கப்பட்டிருப்பார்களேயானால் அவர்களுடைய வீடு கட்டப்படும். அதை கட்டுகிறவர் கர்த்தராக இருக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் வீடு வாசல்களை ஏற்படுத்திவைக்கிறார். "தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்; துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள்" (சங்.68:6). வீடுகட்டுவது என்பது சாதாரண விஷம் அல்ல. வீட்டைக் கட்டிப்பார் கலியாணத்தை முடித்துப்பார் என்று சொல்வார்கள். அதில் அவ்வளவு கஷ்டங்கள் இருக்கிறது. கர்த்தரை நம்பிக்கையாக கொண்டிருப்பவர்களுக்கு தேவன் வீடுவாசல்களை ஏற்படுத்திக் கொடுக்கிறார். இஸ்ரவேலர்கள் கானானை சுதந்தரித்துக்கொள்ளும்போது, கட்டாத வீடுகளையும், நடாத திராட்சத்தோட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள். அவர்களை 40 வருஷகாலமாக வழிநடத்திக்கொண்டுவந்த தேவன் இதைச் செய்தார்.

மேலும் அவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் வராதபடி பாதுகாத்தார். "எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.91:9,10). இஸ்ரவேலை வனாந்தரத்தில் வழி நடத்திக்கொண்டுவந்த தேவன் அவர்களுக்கு ஒரு குறைவுமின்றி வழிநடத்திக்கொண்டு வந்தார். அவர்களுடைய பாதரட்சை தேய்ந்துபோகவில்லை, அவர்களுடைய வஸ்திரம் பழையதாய் போகவில்லை. அவர்களுக்கு எந்தவிதமான வியாதிகள் வந்ததாக நாம் காணவில்லை, தாகத்தை தீர்க்க தண்ணீரும், பசியைப்போக்க மன்னாவினாலும் அவர்களை திருப்தியாக போஷித்து வழிநடந்திக்கொண்டு வந்தார். இன்றைக்கு திருமணத்தை முடிக்கிறார்கள், வீட்டைக்கட்டுகிறார்கள், நோயினால் மிகவும் வேதனைஅடைகிறார்கள். ஆனால், நோயற்ற வாழ்க்கை வாழ்கிறவர்கள் கொஞ்சப்பேர்களே, 50 வயதிற்குமேல் அநேகர் நோயினால் தாக்கப்படுகிறார்கள். வனாந்தரத்தில் வழிநடத்தப்பட்டவர்கள் ஆறு லட்சத்திற்கும்மேலானவர்கள்

அவர்களுக்கு பகலில் மேகமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் தேவன் முன்னே சென்றார். அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை தாபரமாககொள்ளும்போது பொல்லாப்பு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழியை கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டுமானால் நீங்கள் வீட்டைக்கட்டும் கர்த்தருக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்.

ஒரு குடும்பம் சிறப்பாக கட்டப்பட அதற்கு உறுதுணையாக இருப்பது பெண்களே. ஆகையாலே "தேவனாகிய கர்த்தர்; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). அந்தப்படியாக ஆதாமுக்கு ஏற்றதுணையாக ஏவாளை கொடுத்தார். அவள் அவனுக்கு ஏற்றதுணையாக இருந்து செயல்பட்டாள். அவர்களுடைய குடும்பம் கட்டப்பட்டது. ஏவாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு காயீன் என்று பெயரிட்டார்கள். இந்த முதலாவது வீட்டைக் கர்த்தர் கட்டினார். அநேக குடும்பங்கள் தொடர்ந்து ஏற்ற துணையாக இருக்கக்கூடிய பெண்களைக் கொண்டு கட்டப்பட்டு வருகிறது இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? குடும்பத்திற்கு தலைவனாக கணவன் இருந்தபோதிலும் குடும்பத்தை கட்டுகிற விஷயத்தில் பெண்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" என நீதிமொழிகளில் வாசிக்கிறோம் (நீதி.14;1). தலைவன் எவ்வளவு பெரிய வேலையில் இருக்கட்டும், அவன் கைநிறைய சம்பாத்தியம் செய்யட்டும். அவன் வீட்டிற்கு வரும்வேளையில் அவனை புன் சிரிப்போடு வரவேற்கும் பெண்கள் இருப்பார்களேயானால் அவனுக்கு சந்தோஷம் ஏற்பட்டு அந்த வீடு கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் காணும். ஒருவேளை கணவன் வரும்வேளையில் அவள் தன்சேலையை வறிந்து கட்டிக்கொண்டு, தட்டு முட்டுகளை உருட்டிக்கொண்டு வந்த கணவனை வரவேற்காமல் அவனுக்கு ஒரு டம்ளர் தண்ணீர்கூட கொடாமல் தடதடவென்று வீட்டுவேலைகளை கவனித்துக்கொண்டிருப்பாளேயானால் அந்தவீட்டில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்குமா என்பதை எண்ணிப்பாருங்கள். வீட்டைக் கட்டுகிறவிஷயத்தில் பெண்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. அவர்களாலே வீட்டைக் கட்டவும் முடியும் அவர்களாலே அந்த வீட்டை இடிக்கவும் முடியும் என வேதம் நமக்குப்போதிக்கிறது. இதில் புத்தியுள்ள ஸ்திரீயின் பங்கையும் புத்தியில்லாத ஸ்திரீயின்பங்கையும் காண்கிறோம்.

சூனேமியாள் என்ற ஒரு பெண் கர்த்தருடைய தீர்க்கதரிசியை எவ்வளவு மதித்து இருக்கிறாள் என்பதை நாம் 2இரா.4:10-வது வசனத்தில் படித்துத்தெரிந்துகொள்ளுகிறோம். அவள் தன் கணவனிடம்; "நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்". நம்மில் எத்தனைபேர் இவ்விதமாக தேவனுடைய மனிதர்களை மதித்து அவர்களுக்கு வேண்டியவற்றை ஆயத்தம் செய்துவைக்கிறோம். இதை சூனேமியாள் ஒரு புத்தியுள்ள ஸ்திரீயாக தன் வீட்டின்மேல் உள்ள இடத்தில் ஒரு அறையை உண்டுபண்ண தன் கணவனிடத்தில் அனுமதிபெற்று தங்களிடம் வந்த தேவமனிதனை தங்கவைத்தாள். கர்த்தர் கொடுத்த வீட்டில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அந்த வீட்டில் ஒரு பகுதியை



**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



**தற்சோதனை பகுதி - 19**

**17. யார் அந்திக்கிறிஸ்து?**

1. பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவன் ☐ வசன ஆதாரம் ---------

2. பிதாவை மட்டும் ஏற்றுக்கொள்ளுகிறவன் ☐ வசன ஆதாரம்

------------------------------------------------------------

3. அநேக அந்திக் கிறிஸ்துகள் இருப்பதால் இது கடைசி காலம் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------

4. இவர்களாலே சத்தியமார்க்கம் தூஷிக்கப்படாது ☐ வசன ஆதாரம்

------------------------------------------------------------

5. வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணுகிறவர்கள் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------------------

6. பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்யமாட்டார்கள் ☐ வசன ஆதாரம்--------------------------

7. மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கைபண்ணாதவர்கள் ☐ வசன ஆதாரம்------------------------------------------------------------

8. அநேக கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் என்று வேதாகமத்தில் சொல்லப்படவில்லை ☐ வசன ஆதாரம் -

------------------------------------------------------------

9. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயிருப்பார்கள் ☐ வசன ஆதாரம்-----------------

10. ஒருவன் கிறிஸ்துவின் உபதேசத்தை கொண்டுவராமலிருந்தால் அவனை நம்வீட்டில் ஏற்றுக்கொள்வதில் தவறொன்றுமில்லை ☐ வசன ஆதாரம்

------------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**


JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW
Contact Us: 94435 58041

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்த வில்லையா? தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தை நினைவுகூருவோம். மேலும் தேவனுடைய குமாரன் இழிவாய் நடத்தப்பட்டார், துப்பப்பட்டார், ஏளனம்செய்யப்பட்டார். அவரை உயர்த்தின தேவன் அவருடைய பலத்த கைக்குள் அடிங்கியிருப்போமானால் நம்மையும் உயர்த்துவார். இல்லை இது Prestige Issue. என்னால் விட்டுக்கொடுக்கமுடியாதென்றால், நாம் மிகுந்த வேதனைப்பட வேண்டியிருக்கும். நாம் பிடிவாதமாய் இருக்கும்போது வெற்றியைப்பெறுவது கூடாத காரியம். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி.2:3). சிலவேளைகளில் நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகள் வரலாம். நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மை குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். அப்பொழுது நம்மால் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ளமுடியாமல் நம்முடைய கோபத்தினை வெளிப்படுத்திவிடுவோம். ஆனால் நாமோ கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக நம்முடைய ஆவியை அடக்குகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வசனங்களை நினைவு கூர்ந்து இயேசு வார்த்தையினாலே பிசாசை ஜெயித்ததுபோல நாமும் தேவவசனங்களால் பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளவேண்டும். நம்மை இவ்வுலகம் வேதனைப்படுத்தும்போது, இயேசுவையும் வேதனைப்படுத்தியது என்பதை நினைத்து பொறுமையோடிருப்போம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் அனைவரும் இயேசுவை குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் ஏளனம் செய்தனர். ''மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்'' (மத்.27:42-43) ஆனால் இயேசுவோ, ''.....பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்...'' (லூக்.23:34) முடிவில் என்னநடந்தது? ''...தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,.. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் அவருக்குத் தந்தருளினார் (பிலி.2:9-11). சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8) தேவனால் உயர்த்தப்பட்டார்.

அன்பு சகோதரியே, கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாயிருப்போமானால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப் போமானால், மேலும் அவருடைய பலத்தகைக்குள் அடிங்கியிருப்போமானால், நாமும் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய பெருமை மற்றும் சரீரத்திற்குரிய பெருமைகளை இப்புத்தாண்டில் நம்மைவிட்டு அகற்றுவோம். ''கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்'' (யாக்.4:10).



ஆண்டவருடைய பணிக்கென கொடுக்க முன்வருகின்றீர்களா? இன்றைக்கு அநேக வீடுகளில் சபை ஆராதனை நடக்கிறது. அதற்கு காரணம் என்ன? சபைக்கு இடம் இல்லை ஆகையால் வீடுகளில் கூடி தேவனை ஆராதனை செய்கிறார்கள். குறிப்பாக இந்த ஆராதனைக்காக இடம் கொடுக்கிறவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களே! அன்பானவர்களே, புறஜாதிகளுடைய வீட்டைப்பாருங்கள். சாமி ரூம் என்று ஒரு அறையை ஒதுக்கிவைத்துவிடுவார்கள். அந்த அறைக்குள் குளிக்காமல் போகமாட்டார்கள். அதில் அநேக விக்கிரக படங்களை மாட்டிவைத்து பூஜைசெய்வார்கள். தேவனை அறியாத அல்லது கர்த்தரை அறியாத அந்த ஜனங்கள் மத்தியில் இருக்கக்கூடிய விசுவாசம் கூட நம்மில் இல்லாவிட்டால் நாம் அவர்களிலும் மோசமானவர்களாகிவிடுவோம். வீட்டைக்கட்டுகிறவர் கர்த்தர் ஆகையால், தேவனுக்கு முதலிடம் கொடுப்போம்.

கர்த்தர் வீட்டைக் கட்டுகிறவர் மாத்திரமல்ல, அந்த சந்ததிகளை ஆசீர்வதிக்கிறவருமகூட. "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்; நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்" (ஆதி.18:19). கர்த்தர் ஆபிரகாமின் மீது அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். ஆகையால் அவன் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறான். அவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் கட்டளையிட்டு சொன்னது நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்பதே. நீங்கள் உங்களுடைய பிள்ளைகளுக்கு வீடுகளை கட்டிவைத்திருக்கிறீர்கள், பலவிதமான பொருள்களை சவதரித்துவைத்திருக்கிறீர்கள், நிலங்களை சம்பாதித்து வைத்திருக்கிறீர்கள். ஆனால், ஆபிரகாமைப்போல உங்களுடைய பிள்ளைகளுக்கு நீதி நியாயங்களை செய்யவும் கர்த்தருடைய வழியைக் காத்துநடக்கவும் போதனை செய்திருக்கிறீர்களா? நாங்கள் எல்லாம் செய்தோம் ஆனால் கர்த்தருடைய போதனையை மட்டும் கொடுக்க தவறிவிட்டோம் என்பீர்கள். ஆம், இன்றைக்கு அநேக குடும்பங்கள் நல்ல கல்வியை பிள்ளைகளுக்கு கொடுக்கிறார்கள், நல்ல வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கிறார்கள். கொடுக்கவேண்டிய நல்ல போதனைகளை கொடுக்க மறந்துவிடுகிறார்கள். அன்பானவர்களே, நீங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்ட குடும்பத்தின் சந்ததியில் இருந்து ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் வேதத்திற்கு உங்களுடைய கவனத்தை செலுத்துங்கள். அதற்கு கீழ்ப்படியுங்கள், அப்பொழுது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

"நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான்; பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்படும்" என நீதிமொழிகள் புத்தகத்தில் படிக்கிறோம் (நீதி.13:22). பிள்ளைகளுக்கு பெற்றோர்களே பொருள்களை சேர்த்துவைக்கவேண்டும். ஆகையால் நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்குச் சுதந்தரம் வைத்துப்போகிறான். நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு நல்ல குடும்பமாக இருப்பீர்களானால் உங்களுடைய சந்ததிகளுக்கு சுதந்தரம் வைத்துப்போவீர்கள். இந்த சுதந்தரம் அவர்கள் கர்த்தரை அறிந்துகொண்டு வளர்ந்துபெருக பயனுள்ளவைகளாக இருக்கும். சில இடங்களில் இந்த சுதந்தரம் சண்டையைக் கொண்டு வந்துவிடுகிறது, அவர்களுக்குள் பிரிவினையைக்

கொண்டுவந்துவிடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாதிருக்க வேதத்தின் ஆலோசனைக்குத் திரும்புங்கள். "கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும் அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது" (சங்.33:12). உலகத்தில் அநேக ஜாதிகள் இருக்கிறது. இதில் கர்த்தரை தங்களுக்கு தெய்வமாகக்கொண்ட ஜாதி ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கிறது. அவர் எந்த ஜாதியை சுதந்தரமாகத் தெரிந்துகொண்டுள்ளாரோ அந்த ஜாதி பாக்கியமுள்ளதாயிருக்கிறது. அவர் இஸ்ரவேலை தெரிந்துகொண்டார். அது ஆபிரகாமுடைய சந்ததியாயிருக்கிறது. அதில் ஆண்டவர் இயேசு வந்தார். அந்த சந்ததி பரிசுத்தமுள்ளதாயிருக்கிறது. அதிலுள்ளவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப்போவதில்லை என வேதம் சொல்லுகிறது. அந்த ஜாதியில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். உலகத்தில் எத்தனையோ ஜாதிகள் பிரிவினைகள் இருந்தாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி மட்டுமே இரட்சிக்கப்படும். அந்த சந்ததியைக்குறித்து வேதாகமம் நமக்குப்போதிக்கிறது. அது பரிசுத்த சந்ததியாயிருக்கிறது. ஒரே சபையாக இருக்கிறது, ஒரே சரீரமாயிருக்கிறது, ஒரே ஆவியாயிருக்கிறது, ஒரே மந்தையாயிருக்கிறது, கர்த்தருடைய வீடாயிருக்கிறது. அந்த வீட்டில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். கர்த்தர் வீட்டைக் கட்டுகிறார். அதை தமக்கென்று கட்டுகிறார். அதில் அசுத்தர்கள் இருப்பதில்லை. அது நித்தியநித்தியமாக நிலைத்திருக்கும். அதை ஒருவரும் அசைக்கமுடியாது. அது அழிவில்லாதது.

கர்த்தர் வீட்டைக் கட்டுகிறவர். அவருடைய ஆலோசனையின்படி வீடு கட்டப்படவேண்டும். "நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்" (சங்.118:15). நீங்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட வீடாயிருப்பீர்களானால் உங்களுடைய வீட்டில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டாகும். கர்த்தரின் வலதுகரம் உங்களோடிருந்து பராக்கிரமஞ்செய்யும். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் கர்த்தரை நம்பி பெரிய காரியங்களைச் செய்வீர்கள்.

**தேவனுடைய ஆலோசனையின்படி அஸ்திபாரம் போடப்பட்ட வீடு எப்படியிருக்கும்?**

"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (லூக்.6:46-490). இந்த உவமையின் கருத்தை புரிந்திருப்பீர்கள் என நம்புகிறோம். ஆண்டவருடைய ஆலோசனைப்படி உங்களுடைய இல்லங்களை கட்ட முற்படுங்கள். அப்பொழுது உங்களுடைய வீட்டிற்கு வரவிருக்கும் ஆபத்திலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள். தொடர்ந்து கர்த்தருடைய ஆசீர்வாதமான கரம் உங்களோடு என்றும் இருக்க நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

## நீங்கள் உயர்த்தப்படவேண்டுமா?

### Should You Be Exalted?

*-Glory Arjunan*



**அ**ன்பான சகோதரிகளே, நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள் "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3) என்ற அன்பின் கட்டளையை நம் முன் வைக்கிறது பரிசுத்தவேதாகமம். இக்கட்டளையானது கைக்கொள்ளுவதற்குச் சற்றுக்கடினமாயிருக்கலாம். வீட்டிலும் சரி, வேலைபார்க்கும் இடங்களிலும் சரி, ஆவிக்குரிய உலகிலும் சரி, எங்குபார்த்தாலும் 'பெருமை' மனமேட்டிமை, அகந்தை போன்ற ஆகாத பிசாசின் குணங்கள் தலைவிரித்தாடுகிறது. கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் நமக்கு இக்குணங்களைக் கொண்ட ஜனங்கள் மத்தியில் வாழ்வது சிலவேளைகளில் மிகக்கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவை அறியாத, அல்லது ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களைக் குறித்து, ஆதியும் அந்தமுமானவர் சொல்லுகிறார்; "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்....." (வெளி.22:11) எனக் கூறும் வேளையில், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளையாய் ஜீவிக்கிற நம்மைப் பார்த்து ".....நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி.22:11) எனக் கூறுகிறார். அன்பு சகோதரியே நாம் உயர்த்தப்படவேண்டுமானால் மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவோம்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார் கீழாக்காமல் மேலாக்குவார் என உரிமைபாராட்டி அநேக நேரங்களில் ஏமாற்றம் அடைகின்றனர். நிச்சயமாகவே தேவன் நம்மை இவ்விதமாய் உயர்த்த வல்லவர். ஆனபோதிலும் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால் இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றவேண்டியது அதிமுக்கியமானது. இயேசு நமக்கு மாதிரியை வைத்துச்சென்றார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், .......அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார் ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும் நானும் எவ்வாறிருக்கிறோம்? சற்றே நம்மை நாமே நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது மனத்தாழ்மை நம்மில் உள்ளதா? இல்லையென்றால் நாம் தேவனுடைய பிள்ளைகள், இவ்வுலகத்தில் பிசாசின் பிள்ளைகளுக்குமுன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா?

பின்பற்றுகையில் இது அவித்துப்போடக்கூடாத நன்மையல்ல, மாறாக, தேவன் இருக்கின்றார் என்பதற்கும் ஆதாரமிருக்கிறதல்லவா? மேலும் சாத்தான் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான் என தேவன் நம்மை முன்னெச்சரிக்கிறபடியினால், தேவனுடைய எதிராளி தொடந்து சந்தேகத்தைத் தூண்டுகிறவனாயிருப்பான் என நாம் எதிர்பார்ப்பதில்லையா? (யோவா.8:44)

"நான் தூங்கினபோது உம்முடைய ஜாக்கிரதையான பராமரிப்பிற்காகவும் என்னுடைய கண்விழிப்பின் போது என்னை உற்சாகப்படுத்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கைக்காகவும் உமக்கு நன்றி பிதாவே"

நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. ......நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்பிவிக்கத்தக்கவன் இல்லை........" - ஏசா.43:11-13.

## பொது அறிவு சோதனை

1. அணுக்கரு விசையைப் பற்றிய கொள்கையை விளக்கியவர் யார்?

அ) ஜான்ஸ்டீன் ஆ) யுகாவா இ) ஆட்டோஹான்

2. எதன்மூலம் வானவில் தோன்றுகிறது?

அ) ஒளி விலகல் ஆ) ஒளிச்சிதறல் இ) நிறப்பிரிகை

3. பென்சில் தயாரிப்பில் உதவும் பொருள் எது?

அ) ஜிப்சம் ஆ) கார்பைடு இ) கிராபைட்

4. இந்தியா முதன் முதலில் ஏவிய துணைக்கோள் எது?

அ) ஆரியப்பட்டா ஆ) அக்னி இ) வருணா

5. சர்வதேச அணுசக்தி கழகத்தின் தலைமையிடம் எங்குள்ளது?

அ) ஜெனிவா ஆ) லண்டன் இ) வியன்னா

விடை
1. இ
2. இ
3. இ
4. அ
5. இ

## ஜெபியுங்கள்

- புதிய வாசகர்களுக்காக...
- தேசங்களின் சமாதானத்திற்காக...
- மனித நேயம் உலகமெங்கும் வளர்ச்சியடைய...
- சுவிசேஷம் தடையில்லாமல் அறிவிக்கப்பட...
- ஊருக்கு ஒரு கர்த்தருடைய சபை எழும்ப...
- வாலிபர்கள் சிருஷ்டிகரை கண்டடைய...
- புதிய நோய்களிலிருந்து ஜனங்கள் காக்கப்பட...





## பழைய பாவ மனிதன் களையப்படுதல்

### Putting Off The Old Man of Sin

பாடம் - 11 விதிகளின்படி ஜெபித்தல் - **Praying According to the Rules**

*-J.C.Choate*



**ஜெபம் என்றால் என்ன?** அது வேறொன்றுமல்ல மனோதத்துவ ரீதியாக மனதுக்கு கிடைக்கும் ஆறுதல் மட்டுமா? அல்லது பக்தி மார்க்கத்தில் செய்யப்படும் ஒரு வெற்றிப் பயிற்சியா? அல்லது கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வில் உண்மையும் சத்தியமுமுள்ள வல்லமையா?

**நாம் யாரிடம் ஜெபிக்கிறோம்?**

கேள்விகளுக்கு சரியான பதில் கிடைக்கும்படி நாம் வேதவசனங்களைப் படிக்க வேண்டும். ஒரு குழந்தை தகப்பனிடம் சொல்லும் வேண்டுகோளாக இதை புதிய ஏற்பாடு படம்பிடித்துக் காட்டுகிறது. இயேசுவானவரின் சீடர்கள் அவரிடம் ஜெபம் பண்ணக்கற்றுக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டபோது அவர் எங்கள் பிதாவே என்று துவங்கினார்... வார்த்தையானது தேவ மைந்தனாகவும் மனித குமாரனாகவும் தேவ பிள்ளைகளின் குடும்பத்தில் முதலாவதாக பிறந்த போது நாம் தேவனுக்கு முன்பாக பிதாவே என்று வரக்கூடிய வழியை நமக்குத் தந்தார்.

**யார் மூலம் ஜெபிக்கிறோம்?**

நம்முடைய பாவச் சுவற்றினால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட பாவம் நிறைந்த மனிதர்களாக நாம் இருந்தபோதிலும் விசுவாசத்தில் நாம் தேவனிடம் திரும்ப வருகிறோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும் (எபிரெயர் 11:6). அவருடைய குடும்பத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு (1கொரிந்தியர் 12:13) அவருடைய குமாரனுடைய இரத்தத்தால் கழுவப்பட்டு கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர்6:3,4). ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம் (எபிரெயர்4:16).

ஆனால் நாம் யார் மூலமாய் பிதாவிடம் சேருகிறோம். இயேசு சொன்னார் நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக அதைச் செய்வேன் நமக்காக பரிந்துபேசுகின்ற நம் சகோதரரைத் (இயேசு) தவிர நமக்குப் பிதாவினிடத்தில் சேருகின்ற வேறு எந்த வழியும் கிடையாது ஆகவே எல்லா விண்ணப்பங்களும் அவருடைய நாமத்திலேயே செய்யப்படவேண்டும்.

### நாம் எப்படி ஜெபிக்கிறோம்?

மிகவும் அதிகமாக நாம் என்ன செய்கிறோமென்று புரியாமல் கிறிஸ்தவர்கள் ஜெபிக்கிறார்கள். தமக்காக செய்யப்படவேண்டுமென்று நினைக்கிறதை தேவனை திருப்திப்படுத்தி செய்யவைக்க முயற்சிக்கிறார்கள். நம்முடைய சித்தமே (விருப்பம்) நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஏனென்றால் எது சிறந்ததென்று நமக்குத் தெரியும் என்று நாம் நினைக்கிறோம். கெத்சமனே தோட்டத்தில் இயேசுவின் ஜெபத்தில் அவர் பின் வருமாறு ஜெபித்தார்.

பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் (லூக்கா22:42).

### நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். நம்முடைய பிதாவினிடத்தில் நம் எந்த விண்ணப்பத்தோடும், நாம் வாழ்க்கையில் சந்திக்கும் எந்தத் தேவையோடும் வரலாம். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று அறிந்திருந் தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் (1யோவான்5:14,15).

ஆனால் கேட்கிறவன் சற்றும் சந்தேகமின்றி விசுவாசத்தோடு கேட்கக் கடவன் ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் (யாக்கோபு1:6). தேவன் நமக்கு பதிலளிக்கிறார் என்பதில் நமக்குள்ள விசுவாசத்துக்கு எப்படி உதவி செய்கிறார்? நன்றியோடு ஜெபம் செய்யும்படி நம்மைத் தூண்டுகிறார் (பிலிப்பியர்4:6).

நன்றி சொல்வதற்கு தேவன் கடந்த காலத்தில் நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளித்திருப்பதை நாம் எண்ணிப்பார்த்து அவர் நமக்குச் செய்ததையெல்லாம் நினைவு கூரவேண்டும். கடந்த காலத்தில் அவர் நம்மீது கவனமுள்ளவராயிருந்தார் என்ற நினைவு தற்போதுள்ள தேவைகளை அவர் சந்திப்பார் என்கிற நம்பிக்கையை பலப்படுத்தும்.

### தேவன் எப்படி ஜெபத்திற்கு பதிலளிக்கிறார்?

நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பதற்கான வழிகள் தேவனைப் பொறுத்தவரை ஒரு எல்லைக்குட்பட்டதல்ல. அவர் மக்கள் மூலமாக, நிகழ்வுகளின் மூலமாக, காலங்களின் மூலமாக, (அந்தந்த காலத்தில்) சரீரம் மற்றும் ஆவிக்குரிய சாதனங்கள் (வழிகள்) மூலமாக செயல்படமுடியும். அவருடைய சுய ஞானத்தில் பதிலளிக்கிறார். நாம் கேட்டதைக் காட்டிலும் முற்றிலும் வித்தியாசமான வழியில் செய்யக்கூடும். ஆனால் அவர் செய்தால் அது நமக்கு நாம் செய்வதைவிட மேலானதாகயிருக்கும்.



மனிதனது 'முன்னேற்றம்' மற்றும் 'உண்மையற்றசெயல்' போன்ற எல்லாவற்றிலும் மனிதத்தன்மை தேவனிலுள்ள பழைய வழக்கமான நம்பிக்கையை வளர்ச்சியடையப்பண்ணியிருக்காதா?

ஆனால் மனித சமுதாயத்தின் உள்ளான ஆத்துமா ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கதறுகிறது (சங்.27:7-10).

இன்றும்கூட, இரண்டு வகையான ஜனங்கள் உலகத்தில் இருக்கின்றனர்: விசுவாசிகளை விட தேவனை மறுதலிக்கிற உணர்வினையுடையவர்களும் (நடக்கையிலும் மனக்கிலேசத்திலும்) பிரச்சனை விகிதம் அதிகமுள்ள, தற்கொலை விகிதம் அதிகமுள்ள புள்ளிவிவரத்தை உடையவர்கள் சிலராக இருக்கின்றனர்.

இதற்கு எதிர் வரிசையில் உள்ளவர்கள் அநேகராகிய விசுவாசிகள். சிலரில் உருவாகிறது அல்லது வேறொன்றில், அவர்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் பயபக்தியோடுகூடிய உணர்வோடு உண்மையாக ஒட்டிக்கொண்டுள்ளது. அவர்கள் தேவனைப் பற்றிய தங்களுடைய அறிவில் சத்தியத்திலிருந்து ஒரு கோடி மைல் தொலைவில் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய இருதயங்கள் தேவன் ஒருவர் உண்டு என உறுதியாயிருக்கிறது.

இருதிறத்தாருடைய மனதில், அடிப்படைகாரணி தேவனோடு இடைபடுகிறது! சில ஜனங்கள் மறுதலிக்கும் அவஸ்தையில் இருந்தபோதிலும் வேறெந்த ஒரு விஷயமும் இப்பேர்பட்ட தகுதியையும் ஒட்டுமொத்த முன் அனுபவத்தையும் உரிமை பராட்ட முடியாது இந்த உண்மை ஒன்றுமட்டுமே இறுதியாக பேசுகிறது. தேவன் இல்லாதிருந்தால், யாருடைய சாயலில் நாம் உருவாக்கப்பட்டுள்ளோம், பெற்றோருக்கு காணாமல் போன ஒரு குழந்தையைப் போல யாரை நோக்கி நம்முடைய ஆவிகள் கதறுகிறது, இந்த பிரபஞ்சம் மற்றும் அவரிடத்திற்கு எட்டாத தொடர் தூரமும் பல வருடங்களாக இருந்துவருகின்ற யுகத்திற்கு மேலாக வளர்ச்சியடைந்திருக்கும்.

இன்னொரு எண்ணம் மனதிற்கு வருகிறது: ஏதோ சாத்தானை நான் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவன் இருக்கின்றான் என்பது பற்றி சந்தேகமில்லை. ஏன்? முதல் காரணம்: பாவம் மற்றும் தீமையாக எப்பொழுதும் அவனுடைய கிரியைகளை சுற்றிலும் என்னால் காணமுடிகிறது. அதன் விளைவாக அழிவு தன்னுடைய பங்கை நிறைவேற்றுகிறது. இரண்டாவது காரணம்: சாத்தானுடைய தந்திரங்களுக்கு எதிர்ப்பைக்காட்டுவதில், தேவன் நம்முடைய எண்ணங்களின் மூலம் சாத்தான் தொடர்ச்சியாக இருக்கின்றான் என்பதைக் குறித்த சரமாரியான கேள்விகளையும் சந்தேகங்களையும் விவரிக்கிறதில்லை! தேவன், தாமே, சாத்தான், கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்கலாமோ என்று பூமிமுழுவதும் சுற்றித்திரிகிறான் என நம்மிடம் சொல்லுகிறார் (1பேது.5:8). தேவன் சாத்தானின் உண்மையான நிலையை அறிந்து நம்முடைய விசுவாசத்தை ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறார் - ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர் - தேவன் நாம் முன்னெச்சரிக்கையாய் இருக்கும்படி விரும்புகிறார் அப்போது தான் நம்முடைய தற்காப்புகள் பலப்படுத்தப்பட்டிருக்கும்.

சாத்தான் இருக்கின்றான் என்பதற்கு உலகத்தில் தீமையானது வினாவற்ற சாட்சியாக எங்குமிருக்கிறபடியினால், இக்காரணத்தினால் இதைப்

பெண்கள் பகுதி

# தேவன் ஒருவர் இருக்கிறாரா? Is There A God?

*-Betty*

**நா**ன் காலையில் தேவப் பிரசன்னத்தின் உணர்வோடு எழுந்தேன். நான் தூங்கின போது அவர் தொடர்ந்து கவனமாய் பார்த்துக்கொண்டார் மேலும் அவருடைய முழுக்கவனத்தையும் எதிர்பார்த்த என் வாழ்க்கையின் எல்லா பாகங்களிலும் அன்பு செலுத்தி, பராமரித்து வந்தாரென என்னுடைய இருதயத்தின் வார்த்தைகள் அவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்தன.

சாத்தான் என் மூளையின் வழியாய் ஒரு எண்ணத்தை விதைக்கிறான். ‘‘நீ தேவனைப் பார்த்திருக்கவில்லை. ஒருவேளை அவர் இருந்தால், நாத்திகர் சொல்வது போல, உன் சிந்தையில் உதித்த ஒரு ஆதாரம் மட்டுமே. பிறகென்ன?

முழுமனதில் கபடில்லாதிருக்கவும் திறந்த மனதுடனிருக்கவும், நான் அந்த எண்ணத்தை பரிசோதிக்கிறேன். பிறகென்ன?

என் இருதயத்தில் வெறுமை உள்ளது. தேவனை நோக்கி நான் செலுத்தியிருந்த மனமார்ந்த அன்பு இதில் உலர்ந்துபோகிறது. பாதுகாப்பான என் உணர்வு மறைகிறது. நான் இதற்கு மேல் வாழ்விற்கான நங்கூரத்தையும் உறுதியையும் கொண்டிருக்கவில்லை. நான் மொத்தத்தில் எங்கே சென்று கொண்டிருக்கிறேன் என்பது பற்றிய அறிவு கொஞ்சமுமில்லை.

என்னுடைய சிந்தையில் என்னைக் காட்டிலும் பெரிதானதொன்றுமில்லை, இன்றைய சரீர ஜீவியத்திற்குரிய தேவைகளைக் காட்டிலும் பெரிதான நோக்கமில்லை- ஏனென்றால் நாளை ஒருவேளை வராது, தொடுவானத்தில் நித்திய வாழ்வு இல்லை, - வெறுமை, அதன்பின் பயம் மற்றும் எனது மனதின் ஒவ்வொரு பிளவிலும் பயனற்ற வெள்ளம்.

இதைவிட தேவனில்லாமல், இது மிகக்கேட்டிலும் அதிகம் ‘‘ஒன்றும் மிஞ்சவில்லை’’. இது, நான் இன்னும் வாழ்கிறேன் மேலும் உலகத்தின் எல்லா சவால்களும் இன்னும் வாழ்கின்றன மேலும் நான் எவ்வித உதவியையும் பெற்றிருக்கவில்லையென மரித்துப் போன நிகழ்வை ஏற்றுக்கொள்வதுடன் இன்னும் இந்த வாழ்வை நான் தைரியமாய் எதிர்த்து நிற்கிறேன். இந்த பீதியான நினைவை மாற்றுவதைக் காட்டிலும் பெரியது வேறொன்றுமில்லை’’. உன்னதமானவரிடத்தில் விசுவாசத்தை இழந்தவர்களுக்கு தொடுவானத்தில் தற்கொலை நேரிடக் காத்திருப்பதில்லை என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஆனால் ஒரு உறுதியான எண்ணம் தனிமைபயத்தினை துளைத்துவிடுகிறது. ‘‘ஆம், நீ வாழ்ந்திடு உன்னைச் சுற்றியுள்ள வாழ்வின் எல்லா அதிசயங்களும் காண்கின்ற உலகத்தின் அதிசயங்களும் வாழ்கின்றன. ஒரு கணவனின் இழப்பு அல்லது பெற்றோருடைய இழப்பு அல்லது ஒரு குழந்தை, நீ பார்த்திருப்பவற்றின் இழப்பு உன்னுடைய மிகப்பெரிய நாசமாயிருக்காது. நீ தேவனைக் கண்டிராத போது இழப்பது தான் மிகப்பெரிய நாசமாயிருக்கும். உன்னுடைய இருதயத்தில் இந்த நிகழ்வுகளின் பரிபூரணத்துவம் சாத்தானுடைய பரிகாசத்தோடும் சந்தேகத்தைத் தூண்டும் செயலோடும் பேசுகிறது. மனிதருடைய மனதில் கனவில் உதித்த ஒரு ஆதாரமாக மட்டும் தேவன் இருந்திருப்பாரானால்,



நமக்கு பதிலளிக்க அவர் தாமதிக்கலாம் ஏனென்றால் தாமதம் நம் விசுவாசத்தை பலப்படுத்தும். எப்படி சரீரத்தில் தாங்குவது உடல் வலிமையைக் கூட்டுமோ அப்படி.

அவர் ஒரு வேளை (நம் ஜெபத்திற்கு) முடியாது என்று பதிலளிக்கலாம் நாம் கேட்டதைக் கொடுப்பதன் விளைவை அவர் அறிய முடியும். அது நமக்கு மிகச்சிறந்ததல்ல என்பதை அவர் அறிவார். அவர் பதில் எப்படியிருந்தாலும் நம்முடைய (ஜெபத்தை) அவர் கேட்டார் என்றும் அவர் நேசிக்கிற அவருடைய பிள்ளைகளுக்கு எப்போதும் எது நன்மையோ அதையே செய்கிறாரென்பதும் நமக்குத் தெரியும்.

**நாம் அற்புதங்களை எதிர்பார்க்கலாமா?**

எல்லா காலங்களிலும் தேவன் மனிதனோடு இரண்டு வழிகளில் செயலாற்றியிருக்கிறார். அவருடைய கிருபையுள்ள செயல்கள் மற்றும் அற்புதங்கள் மூலம். தேவன் அளிக்கின்ற எந்த பதிலும் அற்புதங்கள் மூலமாகத்தான் இருக்கவேண்டுமென்று அநேகமக்கள் தவறாக நினைக்கிறார்கள். ஆனால் வேத வசனம் இதை உண்மையென்று காட்டவில்லை. அற்புதங்கள் என்பது எப்பொழுதுமே (இயற்கை) விதிகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு செய்தி கொண்டுவருபவரையோ அல்லது புதிய செய்தியையோ மறுக்க முடியாத சாட்சிய மாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாடு முழுவதுமாக கொடுக்கப்பட்ட பின் அற்புதங்கள் செய்த காலம் முடிந்து போயிற்று (1கொரிந்தியர் 12:8-10).

கிருபையினால் அனைத்தும் தேவனுடைய பயன்பாட்டில் உள்ளது. கிருபையினால் கொடுக்கப்படும் பதில் அற்புதங்கள் மூலமாக கொடுக்கப்படும் பதிலை விட குறைவானதல்ல. ஆனால் அது இயற்கையின் விதிகளுக்குட்பட்டு செயலாற்றுகிற அவருடைய வல்லமையே. அதற்கு எதிரானதல்ல. வேதாகமத்தை கூர்ந்து கற்றால் கிருபையின் மூலமாக தம்பிள்ளைகளுக்கு பதிலளிப்பது எல்லா

## பன்றிவால் மதம்

*-Jerry*

1.பிராங்களின் கேம்ப் என்பவர் ஒரு பத்திரியையில் பன்றிவால்மதம் என்றொரு கட்டுரை எழுதினார். நியூ ஹெப்ரைட்ச் என்ற ஊரின் மக்கள் பன்றியை தின்று விட்டு அதன் வாலை அவர்களின் புறமதத்தெய்வத்துக்கு படைப்பார்கள்.

2. இதே நடைமுறையின் இந்த உணர்வு பல கிறிஸ்தவர்களிடம் இன்று காணப்படுகிறது. நாம் ஒரு புறமத விக்கிரகத்தை வணங்குவதில்லை. ஆனால் அவர்களுடைய பன்றிவால் மதத்தைக் கைக்கொள்ளுகிறோம். பன்றியை நாம் தின்றுவிட்டு கடவுளுக்கு வாலைப் படைக்கிறோம்.

1. நாம் அனைவரும் தேவனுடைய உக்கிராணக்காரர்களாயிருக்கிறோம் (1கொரி.4:1-4; 1பேது.4:10) அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவர் சொன்னார், உக்கிராண ஊழியம் என்பது ஒரு குறுகிய சந்து, மக்கள் அதில் புகும் போது வெறுப்படைகிறார்கள். சுயநல மிக்க மனித இனத்தின் உள்ளுணர்வுகளை இது விவரிக்கிறது.

உக்கிராணக்காரன் ஒரு வீடு முழுவதற்கும் அல்லது ஒரு பெரும் சொத்திற்கு மேலாளராக இருப்பவர் என்பதைக்குறிக்கும்.

1. தாலந்துகளின் உவமை (மத்.14:25-30).

2. (பவுண்டுகளைப்) பற்றிய உவமை (லூக்.19:12-27)

எங்கே உக்கிராண ஊழியமுண்டோ அங்கே சொந்தங்கொண்டாடுதலும் உண்டு.

1. நம்முடைய வாழ்க்கையே தேவனிடமிருந்து பெற்ற ஈவு.

ஏனெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம். அசைகிறோம், இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள் (அப்.17:28). பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார் (சங்.24:1,2).

**உக்கிராணக்காரரின் கடமைகள்**

1. மற்றவர்களின் பொருள்களை உக்கிராணக்காரனிடம் நம்பி ஒப்படைப்பார்கள்.

2. முதலாளியினுடைய பொருட்களை பாதுகாத்து மேலும் முதலாளியை ஐசுவரியவானாக்குவது உக்கிராணக்காரனின் கடமை.

3. உக்கிராணக்காரர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் மிக புத்திசாலிகளாகவோ வெற்றியுள்ளவர்களாகவோ இருக்கவேண்டும். உடன் வேலையாட்களுக்கு திருப்தியாக இருக்கத் தேவையில்லை. நம்மை எது உண்மையற்றவர்களாக்கும்? வேலைக்காரர்களாய் நடந்து கொள்வதை விட்டு எஜாமானைப் போல் நடிப்பது. தேவனைப் பிரியப்படுத்துவதை விட மனிதனைப் பிரியப்படுத்துவது. சோம்பலுள்ளவர்களாயிருப்பது.எஜமானின் சொத்துக்களை தவறாக பயன்படுத்துவதுநாம் நம்முடைய காலத்தில் நாம் உக்கிராணக்காரர்கள் (எபே.5:15,16). ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளப்பாருங்கள்.

1. நம்முடைய நேரத்தை நாம் தேவனுக்கென்று பயன்படுத்தவேண்டும்.

நீ உன் வாலிபப் பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும் எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருடங்கள் சேராததற்கு முன்னும் (பிர.12:1).

2. மற்றவர்களுக்கு நன்மை செய்வதிலே நாடி நம்முடைய நேரத்தை செலவிடவேண்டும்.

3. நாம் நம்முடைய சரீரத் தேவைக்காகவும் தேவனுக்காகவும் கொடுக்க வேண்டும். வேட்டையாடுவதற்காகவோ அல்லது மீன்பிடிப்பதற்காகவோ தன் வேலையை விடுபவனை மூடன் என்போம். மற்ற காரணங்களுக்காக கற்பிப்பதற்காக தேவனுடைய வேலையை விட்டு விடுபவனை என்ன சொல்லலாம்? எவ்வளவு நேரத்தை நாம் தேவனுக்கு சேவை செய்வதிலும் நம்முடைய ஆவிக்குரிய இலக்கை அடைவதிலும் செலவிடுகிறோம்?

1. நம்மெல்லோருக்கும் தேவனுக்கு சேவை செய்வதிலும் நம்முடைய ஆவிக்குரிய இலக்கை அடைவதற்கு பாடுபடவும் பொறுப்பு உண்டு.

2. சிலர் ஞாயிறு காலை வேதவகுப்புக்குச் செல்வதே இல்லை.

3. சிலர் ஒருபோதும் ஞாயிற்றுகிழமை இரவு அல்லது புதன் கிழமை இரவு தொழுகைக்குச் செல்வதில்லை.



"உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்" (யாக்.5:13)

எப்பொழுது இது (இசைக்கருவி) சேர்க்கப்பட்டது?

1054ல் (11ம் நூற்றாண்டு) கத்தோலிக்க சபையில் பிரிவினை ஏற்பட்டபோது; கிரீக் ஆர்த்தடாக்ஸ் சபை மற்றும் ரோமன் கத்தோலிக்க சபை

48. சபையின் முதன்மை பணிகள் யாவை?

(வேதபகுதி)

1. சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் (மத்.28:20; மாற்கு 16:15)

2. கிறிஸ்தவர்களுக்கு புத்திசொல்லுதல் (ரோம.14:19; 1தெச.5:11)

3. தேவையில் உள்ளவர்களுக்கு உதவுதல் (அப்.4:32-37; 2கொரி.8:1-9; கலாத்.6:10)

49. எபேசியர் 4:4-6: உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள்------------ அழைக்கப்பட்டதுபோல, ------------, ----------------, உண்டு; -----------, -------------------, --------------, எல்லாருக்கும்------------ பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

50. எபேசியர் 5:25-27

25. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் --------- அன்பு கூர்ந்து, ----------- தம்மைத்தாமே ------------ ஒப்புக்கொடுத்தார்.

26. தாம் அதைத் ---------------- --------------------- தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,

27. கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் ------------------ --------------------- மகிமையுள்ள ---------------- அதைத் தமக்குமுன் -------------- -------------------- --------------------- ஒப்புக்கொடுத்தார்.

## தெரிந்துகொள்வோம்

*-K.R.K.Ravi Asir*

▶ பசைதடவிய தபால் தலைகளை முதன் முதலில் உருவாக்கியவர் ஸ்காட்லாந்தை சேர்ந்த ஜேம்ஸ் சாமர் என்பவர்.

▶ முதன் முதலில் பசை மண் கலவையை (சிமெண்ட்) கண்டு பிடித்தவர் ஆஸ்பத்தீன் என்ற இங்கிலாந்து நாட்டுக்காரர் கண்டு பிடித்த ஆண்டு 1845

▶ முதன் முதலில் மனிதனுக்கு மனிதனின் இரத்தத்தை செலுத்தலாம் என கண்டு பிடித்தவர் ஜேம்ஸ்பிளண்டல் என்பவர்தான் கண்டு பிடித்த ஆண்டு 1800

▶ ஒரே நாளில் ஒரே இடத்தில், ஒரே காட்சியில் நடப்பதான நிகழ்ச்சிகளைக் கொண்டே எழுதப்பட்ட முதல் நாடகம் பாரதி தாசன் எழுதிய 'கொய்யாக்கனிகள்'.

▶ முதன் முதலில் இயந்திரத்தில் அச்சிடப்பட்ட முதல் புத்தகம் கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிள் தான். அச்சிடப்பட்ட ஆண்டு கி.பி.1455 .

கிறிஸ்து ஒரே ஒரு சபையை மட்டும் ஆரம்பித்தார்; மற்றவைகள் அவருடைய வார்த்தையை மீறி செயல்படுகின்றன

44. யாரோ ஆண்/பெண் உங்களிடம் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டால் நீங்கள் என்ன பதிலளிப்பீர்கள்?

**(ஆணைக்குரிய வேதவாக்கிய குறிப்புகள்)**

1. சுவிசேஷத்தைக் கேள்விப்படு (ரோம.10:17)
2. இயேசுவே தேவனுடைய குமாரனென்று விசுவாசி (மாற்கு 16:15,16)
3. உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்புங்கள் (லூக்.13:3 ; அப்.2:38)
4. தேவனுடைய குமாரனென்று கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிடுங்கள் (மத்.10:32; அப்.8:37)
5. பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவுக்குள் (அடக்கம் பண்ணப்படு) ஞானஸ்நானம் படுத்தப்படு (அப்.2:38; ரோம.6:3,4)

45. எப்போழுது சபை ஆராதிக்கும்படி கூடி வருகிறது?
(வேதவாக்கியம்) அப்.20:7; 1கொரி.16:2

46. ஆராதனையில் அங்கிகரிக்கப்பட்ட ஐந்து பகுதிகள் யாவை?
(வேதவாக்கியம்)
1. பாடு (எபே.5:19; கொலோ.3:16; எபி.2:12
2. ஜெபம்பண்ணு (1தெச.5:17; 1யோவா.5:14,15)
3. தேவனுடைய வார்த்தையைப்படி (2தீமோ.3:16,17)
4. கர்த்தருடைய பந்தியில் பங்கெடு (மத்.26:26-29; 1கொரி.11:23-29)
5. நம்முடைய வருமானத்தில் கொடு (1கொரி.16:2; 2கொரி.9:6-8).

47. புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக்கருவியோடு கூடிய சங்கீதம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?

இல்லை; எட்டு வேதப்பகுதிகள் பாடுகையில் இசைக்கருவி பயன்படுத்தியதாக சொல்லப்படவில்லை

"அவர்கள் ஸ்தோத்திரப்பட்டைப்பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுபோனார்கள் (மத்.26:30)

"நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்" (அப்.16:25)

"....நான் ஆவியோடும் விண்ணப்பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன்" (1கொரி.14:15).

"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்ரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி" (எபேசி.5:19)

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி" (கொலோ.3:16)

"உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப்பாடுவேன்..." (எபி.2:12)



பெண்கள் பகுதி


## வேதாகம வினாக்களும் விடைகளும்
**Bible Questionnaire and Answers**

-Betty

**வேதாகமம்**

1. வேதாகமத்தின் இரு பிரதான பிரிவுகள் யாவை?
பழைய ஏற்பாடு, புதியஏற்பாடு

2. ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை புத்தகங்கள் உள்ள
39; 27; மொத்தம் 66




3. எப்போது முதல் புத்தகம் எழுதப்பட்டது?
ஏறக்குறைய 3500 வருடங்களுக்கு முன்பு

4. அவைகளை யார் எழுதினார்?
மோசே

5. எப்போது கடைசிப் புத்தகம் எழுதப்பட்டது?
ஏறத்தாழ 96 கி.பி. ல்

6. அதை எழுதியது யார்?
அப்போஸ்தலனாகிய யோவான்

7. வேதாகமத்தை எழுத எத்தனை பேர் தேவனால் ஏவப்பட்டார்கள்?
சுமார் 40 பேர்

8. ஆதியாகமம் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட வருடங்களுக்கிடையே எத்தனை ஆண்டுகள் நின்றுபோயின?

9. வேதாகமத்தில் ஏதேனும் முரண்பாடுகள் உள்ளனவா?
இல்லை

10. ----------- எல்லாம் ----------------- ஆல் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் ----------------- எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் ----------------- , ----------------, ----------------, ----------------- பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2தீமோ.3:16,17).

**முதல் குடும்பம்**

11. முதல் மனிதன் யார்? முதல் பெண் யார்?
ஆதாம்; ஏவாள்

12. அவர்கள் எங்கு வசித்தார்கள்?
ஏதேன் தோட்டத்தில்

13. முதலாவது மரணம் எது?
தேவன் மிருகங்களைக் கொன்று அவைகளின் தோலை உரித்தார்

14. மிருகங்கள் ஏன் கொல்லப்பட்டது?
ஆதாமுக்கும் ஏவாளுக்கும் உடைகளை உண்டாக்கும்படி அவைகளைக் கொன்றார்.

15. மனித உடலின் பெரும்பகுதியை மூடியுள்ள காரியத்திற்காக தேவனுடைய அக்கறைப்பற்றி இது நமக்கு என்ன சொல்லுகிறது?
மனுஷர் தங்களுடைய உடலின் பெரும்பகுதியை மூடிக்கொள்ள வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்

16. (ஆதாம், ஏவாள்) இவர்களின் மூன்று பிள்ளைகளின் பெயர்களைக் கூறு?
காயீன், ஆபேல், சேத்

17: யார் முதல் கொலையாளி?

காயீன்

18. முதல் குடும்பத்தாரால் மிருகங்கள் பராமரிக்கப்பட்டன நிலம் பண்படுத்தபட்டது என்பதை நாம் அறிவோம். ஆதியாகமம் 4ம் அதிகாரத்தின் படி மற்ற செயல்கள் எவை?

அவர்கள் பட்டணங்களைக் கட்டினார்கள்; இசைக் கருவிகளை உருவாக்கினர்; பித்தளை, இரும்பு போன்றவற்றை உருவாக்கக் கற்றுக் கொண்டனர்; மேலும் விஞ்ஞானங்களில் கற்பிக்கிறவர்களாக இருந்தனர்.

19. இக்காலம் என்னவென்று அழைக்கப்படுகிறது?

ஆண் ஆதிக்க அதிகாரம் காலம் அல்லது (தாயிடமிருந்து மகளுக்கும், தந்தையிடமிருந்து மகனுக்கும் சொத்துரிமை காலம்)

20. ஆதியிலே தேவன் வானங்களையும் பூமியையும் உண்டாக்கினார் (ஆதி.1:1) இதை அவர் ஆறுநாட்களுக்குள் செய்து முடித்தாரா அல்லது அவர் பரிணாம வளர்ச்சியை பயன்படுத்தினாரா?

ஆறு நாட்களில்; இல்லை

**இந்த ஜனங்கள் யார்?**

21. யார் பொறுமையுள்ள மனுஷன்?

யோபு

22. யார் அதிக வயது சென்ற மனுஷன்?

மெத்தூசலா (969 வருஷம்)

23. யார் ஞானமுள்ள மனுஷன்?

சாலமோன்

24. யார் பேழையைக் கட்டினான்?

நோவா

25. யார் "தேவனுடைய சிநேகிதன்" என அழைக்கப்பட்டான்?

ஆபிரகாம்

26. யார் இஸ்ரவேலருக்குக் கட்டளையைப் பெற்றுக்கொடுத்தான்?

மோசே

27. யார் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாய்" இருந்தான்?

தாவீது

28. யார் "புலம்புகின்ற தீர்க்கதரிசி" என்றழைக்கப்பட்டான்?

ஏரேமியா

29. யார் சிங்கங்களின் கெபிக்குள் போடப்பட்டான்?

தானியேல்

30. இயேசுவின் மரணத்தைப் படம்பிடித்து விவரித்த தீர்க்கதரிசி யார்?

ஏசாயா (53)

**புதிய ஏற்பாடு**

31. இயேசுவின் வாழ்க்கை சரித்திர புத்தகங்கள் நான்கின் பெயரைக் கூறுக.

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்

32. இயேசு எங்கு பிறந்தார்?

பெத்லகேமில்

33. இயேசு எங்கு வளர்ந்தார்?

நாசரேத்தில்



34. இயேசுவின் வருகையை முன்னறிவித்த முன்னோடி யார்?

யோவான் ஸ்நானகன்

35. மொத்தத்தில் எத்தனை அப்போஸ்தலர்கள் தெரிந்துதெடுக்கப்பட்டிருந்தனர்?

14, மத்தியா, பவுலை சேர்த்து

36. இன்று, எல்லா சமயங்களுக்கும் ஒன்றைச் செய்ய முயல்வதற்கான வாய்ப்புண்டு. இயேசு தமக்குரிய உரிமையைக்கோர என்ன செய்தார்

"...... நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6).

2தெசலோனிக்கேயர் 1:7-10 "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்".

அவராலேயன்றி ஒருவம் இரட்சிக்கப்படமுடியாது. யோவான் 8:24 ".... நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்".

மத்தேயு 7:21-23: பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்..... என்றார்.

**சபை**

37. எதைக்கட்டுவதாக இயேசு வாக்களித்தார்?

மத்தேயு 16:18-20 அவருடைய சபையை

39. எப்போது சபையானது, தேவனுடைய குடும்பம் நிறுவப்பட்டது?

பெந்தெகொஸ்தே நாளில், சுமார் 29 கி.பி. ல்

40. எங்கே?

எருசலேமில்

41. யாரால்?

அப்போஸ்தலர்கள் மூலம் பரிசுத்த ஆவி பொழிந்தருளியப்பட்டதின் மூலம் இயேசு கிறிஸ்துவால் கட்டப்பட்டது (அப்.2)

42. சபையை அடையாளப்படுத்துகின்ற சில பெயர்கள் யாவை?

தேவனுடைய சபை (அப்.20:28). கிறிஸ்துவின் சரீரம் (1கொரி.12:27); கிறிஸ்துவின் மணவாட்டி (வெளி.21:9). சபை (அப்.2:47) வழி (அப்.9:2); கிறிஸ்துவின் சபையார் (ரோம.16:16). கிறிஸ்துவின் குடும்பம் (எபே.3:14,15).

43. எல்லா பிரிவினை சபைகளில் இரட்சிக்கப்பட்டவர்கள் உள்ளனரா?